# ஹிந்திப் பிரசாரப் போக்கு

## விபசார விர்த்திக்கு சலுகையா?

## அய்யர் பாடு குசால்; அம்மா கதி என்ன?

## ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா?

### காந்தியார் நொண்டிச் சமாதானம்

காந்திஜி ஹரிஜன் பத்திரிகையில் எழுதியது:—

இறுதியான ஹிந்தி பரீட்சையில் தேறிய யுவர்களும், யுவதிகளும் சர்டிபிகேட்டுகளைப் பெறுவதற்காக ஹிந்தி பிரசார ஸர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழா, சென்ற மாதம் 26-ந் தேதி நடைபெற்றது. பட்டதாரிகளுக்கு சர்டிபிகேட்டுகளை வழங்க என்னை அழைத்திருந்தார்கள்.

அவர்கள், ஹிந்தி-ஹிந்துஸ்தானி பிரசாரம், தாய் நாட்டின் சேவை, நல்லொழுக்கம்-இவற்றைக் கடைப்பிடிப்பதாக, மூன்று அம்சங்கள் பொருந்திய பிரதிக்ஞையை எடுத்துக்கொள்ளவேண்டியிருந்தது.

பிரதிக்ஞையின் கடைசி இரண்டு பாகங்களையும் பட்டதாரிகளின் விசேஷப் பார்வைக்குக் கொண்டு வந்தேன். ஸேவை, நல்லொழுக்கம் இவைகளைப் பற்றிய ஷரத்துக்களை பிரதிக்ஞையில் சேர்த்ததில் அதைத் தயாரித்தவர்களுக்கு குறிப்பானதோர் உத்தேசம் இருந்தது. இந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியேறும் யுவர்களும், யுவதிகளும் ஸேவா உணர்ச்சியுடன் ஹிந்தி பிரசாரம் செய்வார்களானால் அவர்களுடைய நடவடிக்கையும் குற்றங் குறையில்லாமல் உத்தரவாதமாயிருக்குமானால் அவை இரண்டுமே ஹிந்தி பட்டதாரிகளின் கௌரவத்தை அதிகப்படுத்தும். ஹிந்தி—அல்லது ஹிந்துஸ்தானியை ஜனங்களிடையே பிரபலப் படுத்துவதற்கு அவர்களே போதிய பிரசார சக்திகளாயிருப்பார்கள். ஆகையால் அவர்கள், அப்பொழுது, தாம் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை அவர்களுக்கு ஞாபக மூட்டினேன். என்னுடைய வாதத்தை பலப்படுத்தும் முறையில், ஒரு ஹிந்தி உபாத்தியாயர் ஒழுங்கு தவறி நடந்துகொண்டதால் ஹிந்தி பிரசாரத்துக்கு ஏற்பட்ட இழுக்கைப் பற்றி பிரஸ்தாபித்தேன். இந்த விஷயத்தைப் பற்றி நான் பிரஸ்தாபித்தபோது இவ்வாறு விஷயங்கள் நடைபெறப் போகின்றன என்று நான் கொஞ்சமும் நினைக்கவேயில்லை.

### ஹரிஹர சர்மா கதை

மறுநாள் காலை எனக்கு ஒரு கடிதம் வந்தது. இந்தப் பிரதிக்ஞையை தயாரித்த மூல புருஷர்களில் ஒருவரும் சபாவின் காரியதரிசியுமான பண்டித ஹரிஹர சர்மா புனிதமான வாழ்க்கையிலிருந்து வீழ்ச்சியுற்றார் என்பதாக, விவரமான தகவல்கள் அந்தக் கடிதத்தில் இருந்தன. ஸத்யாக்ரஹ ஆச்ரமம் ஸ்தாபிக்கப்பட்டது முதல், அவர் அதன் அங்கத்தினராயிருந்து வந்திருக்கிறார். அவரும் அவருடைய மனைவியும், ஹிந்தி பிரசார வேலைக்கு வேண்டிய யோக்யதாம்சங்களை சம்பாதித்துக் கொண்டனர். தெற்கே, பல வருஷங்களாகவே அவர் ஹிந்தி இயக்கத்தின் ஆத்மா போலிருந்து வந்திருக்கிறார். ஆச்ரமத்தில் அவரை எல்லோரும் மிகுந்த கௌரவத்துடன் மதித்துவந்தனர். சந்தேகத்துக்கும் குறை கூறுவதற்கும் கொஞ்சங்கூட இடமில்லாதிருந்த கோஷ்டியில் அவரும் ஒருவர் ஆகையால், கடிதத்தில் கண்டிருந்ததை நான் நம்பக்கூடவில்லை.

மறுநாட் காலை இதைப்பற்றி அவரிடம் பேசினேன். கொஞ்ச நேரம் இந்தக் குற்றச் சாட்டை அவர் எதிர்த்துப் பார்த்தார். ஆனால் ஒளித்து வைப்பதை சகிக்க அவரால் கூடவில்லை. எல்லாவற்றையும் அவர் ஒப்புக்கொண்டு விட்டார். இந்தப் பாபத்தைப் பற்றி பகிரங்கமாய் எடுத்துரைக்க, ஆச்ரம நியதிகளின்படி அவர் எனக்கு அனுமதியளித்தார். உடனே இச்செய்தியை நான் நிர்வாஸ்தர்களுக்கு அறிவித்தேன். பிரமிப்பான இச் செய்தி அவர்களை திடுக்கிடச் செய்தது. தன் வீழ்ச்சியின் காரணமாக பண்டித ஹரிஹர சர்மா, ராஜிநாமாச் செய்து விட்டார். நிர்வாக சபையினர் ராஜிநாமாவை அங்கீகரித்திருப்பார்கள். ஹிந்தி பிரசார நிர்வாகமும் அடியோடு மாற்றியமைக்கப்பட்டிருக்கும். காகா கலேல்கர் ஹிந்தி பிரசார சபையின் நிர்வாகஸ்தர்களுக்கு வேண்டிய ஆலோசனையைக் கொடுப்பதற்காக சென்னையில் தங்கினர்.

ஆனால், விஷயம் இதோடு முடிந்து விட்டதாக நான் கருத முடியாது. இதுபோன்ற சம்பவங்களை பிரசுரிக்கலாகாது என்று சிலர் நினைக்கலாம். அம்மாதிரி நினைப்பவர்களுக்கு முழு உண்மையும் தெரியாதென்பது நிச்சயம்.

நான், நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்கள் ஆண்களும், பெண்களும் அடங்கிய பாமர வர்க்கங்களைப் பற்றியவை, நூற்றுக் கணக்கான தொண்டர்கள் மூலமாய் அவை வேலை செய்கின்றன. ஒழுக்க முறை நியதிகளைத் தவிர வேறு எந்த அதிகாரமும் அவர்கள்மீது இல்லை. தொண்டர்கள் சிலர்களாய் நல்லொழுக்கத்துடன் நடந்துகொள்வார்களென்பது சாதாரணமாய் ஒப்புக் கொள்ளப்படும் விஷயமாகையால் அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரர்களாகின்றனர். அவர்களுடைய சீலம் குறைந்தால், உடனே அவர்களுடைய செல்வாக்கும்போய் விடும். விஷயங்களை வெளிப்படுத்துவதால் மேற்படி ஸ்தாபனங்களுக்கு கெடுதல் ஏற்படவில்லை. பாபச் செயல்களில் ஈடுபட்டவர்களும் அதனால் கெட்டுப்போகவில்லை.

இந்தியாவெங்குமுள்ள ஊழியர்கள், பண்டித சர்மாவின் வீழ்ச்சியிலிருந்து ஒரு படிப்பினையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் எப்பொழுதும் உஷாராக இருக்க வேண்டும். சைத்தான் தாக்க முற்பட்டால் அதை எதிர்த்து நிற்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது. மற்றவர்களைவிட தெற்கேயிருக்கும் ஹிந்தி பிரசாரகர்களுக்குத்தான் இது ரொம்பவும் முக்கியமானது. அங்கு 'பர்தா' வழக்கமில்லை. ஆண்களைவிட பெண்களுக்குத் தான் இங்கு ஹிந்தியில் சிரத்தையிருப்பதாகத் தெரிகிறது. உபாத்தியாயர்களின் தொழில், சுபாவமாகவே, மாணவர்களின் ஒழுக்கங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதாயிருக்கிறது. ஆகையால்தான் மற்ற தொழில்களைப் போலின்றி சந்தேகத்தைப் போக்கி நம்பிக்கையை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது.

பெண்களுக்கு "பிரைவேட் டியூஷன்" சொல்லிக் கொடுப்பதை ஹிந்தி பிரசார சபா அடியோடு நிறுத்தி விட்டால், அசம்பாவிதங்களை அடியோடு தவிர்க்கலாம் என்ற யோசனை ஏற்கனவே வந்திருக்கிறது. இதை நான் ஏற்றுக் கொள்ளக்கூடவில்லை. ஒருவன் எவ்வளவு தான் ஜாக்கிரதையாக இருந்தாலுங்கூட, தவறுகள் ஏற்படத்தான் செய்யும். ஆகையால், அளவு கடந்த ஜாக்கிரதைக்கு இடமே இல்லை. பெண்களுக்கு 'பிரைவேட் டியூஷன்' சொல்லித் தருவதை நிறுத்துவது, ஒழுக்கமுறை அடியோடு கிடையாது என்பதை ஒப்புக்கொள்வது போலாகிறது. கிலியடைவதற்குக் காரணமே இல்லை. தங்கள் சீலம் கெடாமல். ஹிந்தி பிரசாரகர்கள் நன்றாய் வேலை செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நான் பொதுப்படையாகக் கூறமுடியும். நிரூபிக்கப்பட்ட எந்த வீழ்ச்சியையும் நான் பொது மக்களிடமிருந்து ஒளித்து வைக்கவேயில்லை. அவற்றை அடியோடு தவிர்க்க வேண்டுமென்பதற்காக நாம் இரும்புக் கூண்டுகளில் அடைந்து கிடக்க வேண்டுமென்பதில்லை. ஆனால், அத்தகைய விஷயங்களை அழைக்கவேண்டும் என்பதுமில்லை. அவை அழையாமல் வரும்போது, அவற்றை சமாளிப்பதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும். திரு. சர்மாவின் வீழ்ச்சிக்குக் காரணம், அவர் வீழ்ச்சியை வரவேற்றதே. அவர் தன்னிடம் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

### சர்மாவைப் பற்றி கவலை வேண்டாம்

ஹிந்திப் பிரசார வேலையில் சிரத்தையுள்ள பொது மக்கள், பண்டித சர்மாவின் எதிர் காலத்தைப் பற்றியோ அவர் செய்த தவறின் விவரங்களைப் பற்றியோ அறிந்து கொள்வதில் ஆவல் கொள்ளவேண்டாம். அவர் சீர்திருத்துங் காலையில் என்னுடன் இருப்பார். ஹிந்தி ஸ்தாபனத்திலிருந்து அவர் மறைந்து விடுவதால். அவருடைய சேவை முடிந்துவிட்டதென்று அர்த்தமல்ல. இந்த வீழ்ச்சி அவருக்கு இந்த ஜென்மத்திலேயே கண்டிராத ஒரு படிப்பினையை அளித்திருக்குமானால் அவர் நஷ்டமொன்றும் அடையவில்லை என்று சொல்வேன். ஹிந்தி பிரசாரத்திற்கும் அவரைப் போன்ற திறன் படைத்த ஊழியர் நஷ்டமாகவில்லை என்று சொல்வோம்.

குற்றமிழைப்பது மனித சுபாவம். ஆனால், அக்குற்றத்தை ஒப்புக் கொண்டு அதற்கு இனி இடங் கொடுப்பதில்லை என்று நடந்து கொள்வது ஆண்மைத்தனம். இந்த வீழ்ச்சியின் விளைவாக சீர்திருந்துவதற்கு ஆண்மை குணம் அவரிடம் இருக்கிறது என்று நம்புவோம். உலகில் தோன்றிய பெரியோர்களில் பலர், பெரிய குற்றங்களை இழைத்தவர்கள்.

—(தினமணி)